உ

சிவமயம்

ஸ்ரீமங்களாம்பிகா சமேத வாஞ்சீஸ்வரப் பெருமாள் துணை



ஸ்ரீ நிரம்பவழகியர் ஆதீனம்

ஆச்சார்ய சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ சுப்ரமணிய தேசிகர் என்ற

பால உதயமூர்த்தி குரு சுவாமிகள்

நகரத்தார் பெண்கள் குரு

துலாவூர் மடம்

விலை 25 காசுகள்

79/1

உ
சிவமயம்
குருவே துணை.

நகர வரன்முறை

நமது பாண்டிய நாட்டில் ரத்ன தன மகுட பூபால வைசியரென விளங்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கலியுகாதி 2312ல் தொண்டை நாட்டிலிருந்து சோழதேசம் வந்து அன்றுட்டு மன்னன் மனுநீதிச் சோழனுல் வைசியர்களை ஆதரித்து வந்தான். அவர்கள் தெய்வபக்தி நிறைந்தவர்களாக இருந்தபடியால் அவர்களுக்கு க்ஷேத்திர சுவாதீனமும் மரியாதை முதலியன செய்து காவேரிப்பூம்பட்டணத்தை ஸ்திரவாசஸ்தலமாக ஏற்படுத்திக்கொடுத்து தன்மரபிற்கு மகுடம் தரித்துவைக்கும் அந்தஸ்தும் பாத்தியமும் அவர்களுக்கு உண்டுபண்ணிக் கொடுத்து, அதிலிருந்து அவர்கள் வியாபாரம் மிகுந்து சிவநேசச்செல்வராயிருந்து வந்தார்கள்.

அநேக ஆண்டுகளுக்கு பிறகு சோழதேச மன்னன் பூவந்திசோழன் வைசியகுலத்துப்பெண்ணை சிறையில் வைத்தகாரணத்தால் வைசியர் 8000ம் குடும்பத்தார்களும் கூட்டம் கூடி அரசன் செய்த கொடுமையால் நாம் இனிமேல் உயிர்வைத்துக் கொள்வதே இல்லை என்று தீர்மானித்து தங்கள் ஆண்பிள்ளைகளை மட்டும் அவர்களுக்கு உபாத்தியாராக இருந்த ஆத்மனுதசாஸ்திரியிடம் சிசுபரிபாலனம் செய்து வரவேண்டியதற்கான பொருளும் மரகத விநாயகர் பூஜையையும் ஒப்புவித்துவிட்டு மற்றுள்ள ஆண் பெண் அடங்கலும் மானத்தைக்காக்கும் பொருட்டு பிராணஹானி செய்துகொண்டார்கள்.

உபாத்தியாயரிடமிருந்த மொத்தம் 17 வழியிலும் 1502 ஆண்குழந்தைகள் மட்டும் கல்வி பயின்று நல்ஒழுக்க முள்ளவர்களாகவும், பருவமடைந்தவர்களாகவும் வளர்ந்து வந்தார்கள்.

அங்நாட்டு மன்னன் பூவந்தி சோழனுக்கு வயோதிக காலமாகக் கூடிய தருவாயிலிருந்தான். அப்போது தன் மகன் ராஜபூஷணனுக்கு மகுடம் தரிக்க ஏற்பாடு செய்து, ஆத்மநாத சாஸ்திரியை அழைத்து உம்மிடமுள்ள வைசிய குமாரர்கள் 1502 பெயர்களையும் நம்மிடம் கூட்டிவர வேணுமென்று ஆக்ஞாபித்து அதன்படி வந்துசேர்ந்த வைசிய இளைஞர்களிடம் எம் குலத்துக்கு மகுடம் தரிக்க வேண்டுமென்று வார்த்தையைச் சொல்லலானான். அதற்கு வைசிய குமாரர்கள் அரசனுக்கு சொன்ன பதிலாவது.

அரசனே! உன்னுடைய நிஷ்டூரம் தாங்காமல் எங்கள் தாய் தந்தையர்களும் பெண்வார்சுகளும் சேர்ந்து பிராணத் தியாகம் செய்து கொண்டார்கள் ஆதலால் எங்களுக்குக் கலியாணம் செய்துகொள்ள எங்கள் குலத்தில் பெண்களே கிடையாது. ஆதலால் பிரமசாரிகளாக இருக்கும் நாங்கள் எப்படி மகுடம் தரித்து வைக்க முடியுமென்று சொல்லியதின் பிறகு அரசனும் ஆலோசித்து வைசிய குலகுருவான ஈசான சிவாசாரியரையழைத்து இது தகவலைச் சொல்லி வைசியர்களுக்கு எந்தக் குலப்பெண்களை விவாகம் செய்ய விதியிருக்கிறது என்று வினவ சிவாசாரியரும், பிர்மகுலத்திற்கு சத்திரியப்பெண்ணையும், சத்திரியகுலத்திற்கு வைசியகுலப்பெண்ணையும் வைசியருக்கு வேளாளர் குலப் பெண்ணையும் விவாகம் செய்ய பொருத்தமிருப்பதால் வேளா

எப்பெண்களை விவாகம் செய்வது உத்தமம் என்று சொன்னார்.

அரசன் உடனே வேளாளர்களையும் அவர்கள் குருமூர்த்தியையும் அழைத்துப் பெண்கொடுக்கவேணுமென்று கேட்டதில் வேளாளர்கள் அரசன் ஆணைக்கு கட்டுப்பட்டு குருவிடம் வரிதிவாங்கி அரசனே நாங்கள் வைசியர், களுக்குப் பெண்கொடுத்தால், நாங்கள் கொடுக்கும் எங்கள் பெண்களுக்கும் அவர்கள் வயிற்றில் பிறக்கும் பெண் சந்ததிகளுக்கும் எங்கள் குரு பீடந்தான் அவர்களுக்கு குருவாக பரம்பரைக்கும் இருக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள். அரசனும் அப்படியே கட்டளையிட்டு வைசியர்களும் அதற்கு இணங்கி ஒப்புக்கொண்டு. ஆண்களுக்கு ஈசான சிவாசாரியரும் பெண்களுக்கு நிரம்ப வழகிய தேசிக சுவாமிகளும், குருமூர்த்திகளாக ஏற்படுத்திக் கொண்டு விவாகமும் செய்து தீக்ஷை பெற்றுக் கொண்டு வைசியர்களால் ராஜபூஷண சோழனுக்கு மகுடம் தரித்து அப்பால் ரத்னதன மகுட பூபால வைசியர் என்று பட்டம் விளங்கப் பெற்று இருந்து வரும் நாளில்

பாண்டிய நாட்டில் மதுரையை ஆண்ட ஆதி சவுந்தர பாண்டியன் தன் நாட்டுக்கு நற்குடிகேட்க சோழராஜனிடம் சென்றான். நற்குடி கேட்டுவந்த பாண்டியனுக்கு சோழராஜன். ரத்ன தன மகுட பூபால வைசியர்கள் பூறுவையும் கொடுத்து அவர்களின் பெண்கள் குருவையும்கூட அனுப்புவதற்கு அனுமதி தந்தான். பாண்டியராஜனும் அதற்கிணங்கிய மனதுடையவராகி கலியுகாதி 3808, சாலிவாஹனம் 629ல் செல்லாநின்ற பிலவங்க௵ வைகாசி௴ 21உ வெள்ளிக்கிழமை அஸ்த்த நக்ஷத்திரம் கூடிய நன்

நாளில் வைசியர் குடும்பத்தினர்களையும் அவர்கள் பெண்கள் குருவையும் அழைத்துக்கொண்டு பாண்டியராஜன் தன்னுட்டுக்கு வந்தான். ஓங்காரக்குடி என்றவூரில் முதன்முதலாக வைசியர்கள் தங்கிஇருந்தார்கள். அப்பால் வைசியர்களுக்கு பாண்டியன் வேண்டிய க்ஷேத்ர சுவாத்தியமும் 'தடாக' சிவாலய முதலானதுகளையும் அவர்களுக்கு ஸ்வாதீனமாக அநேக ஊர்களில் வழங்கினுன். கூட கூட்டிவந்த பெண்கள் குருநிரம்பவழகிய தேசிக சுவாமிகளுக்கும் மடம் ஏற்படுத்தி துலாவூர் என்ற கிராமத்தையும் மானிபமாக தானசாசனம் வழங்கிஇருந்து வருகிறது. வைசியர்களும் பாண்டிய நாட்டுக்கு வந்ததினின்று மூன்று பிரிவாக அதாவது, அரிவையூர் நகரத்தார் என்றும், சுந்தரம் நகரத்தார் என்றும், நாட்டுக்கோட்டை நகரத்தார் என்றும் மூவகையாக இருந்துவருவதில் ஷை மூன்றுவகை ஆண்களுக்கு கலா மடம், பாதரக்குடி மடமும் பெண்களுக்கு துளாவூர் நிரம்ப வழகியர் ஆதீனம் குருமூர்த்தியாகவும் இருந்து தீக்ஷை முதலிய கைங்கர்யங்கள் நடத்தி சிவத்யானம் செய்து குருமார்களும் சிஷ்யவர்க்கங்கள் யாபேர்களும் சுகமாக இருந்து வருகிருர்கள்.

சுபம்

ஸ்ரீ நிரம்பவழகிய தேசிக சுவாமிகள் துணை.

மகா கணபதயே நமகா:
என்று சிரசில் மூன்று தரம் கொட்டிக் கொள்ள
குருவே நமகா:
என்று கும்பிடவும்

ஜெலசுத்தி

அஸ்த்திருயபட்
என்று தண்ணீரில் நாலு பக்கத்திலும் சுண்டி

கவசாய நமகா
என்று வலக்கை ஆள்காட்டி விரலை நீட்டி தண்ணீரில் சுத்தி

சிவாய வவ்ஷட்
என்று கையைச் சேர்த்து வலக்கை ஆள்காட்டி விரலை இடக்கை நடு விரலோடும், இடக்கை ஆள்காட்டி விரலை வலக்கை நடுவிரலோடும், வலக்கை பத்திர விரலை இடக்கை சுண்டு விரலோடும், வலக்கை சுண்டு விரலை இடக்கை பவித்திர விரலோடும் சேர்த்து தண்ணீரில் காட்ட.

ஆசமநம்

ஆத்மதத்துவாய சுவதா வித்தியாதத்துவாய சுவாதா சிவதத்துவாய சுவதா
என்று வலக்கை ஆள்காட்டி விரலை பெருவிரலடியில் வைத்து மற்ற விரல் மூன்றையும் நீட்டி உள்ளங்கையில் உழுந்து அமுங்கும் தண்ணீரை பெருவிரலடி பிர்மரேகையின் வழியாக தனித் தனியே சாப்பிடவும்

அஸ்திருயபட்

என்று கையைக் கழுவி அந்த கைபெருவிரலடியால் உதடுகளை துடைத்து ஆசமனம் செய்து முடித்து

தொடுமிடம்

இருதயாய நமகா

என்று வலக்கை பெருவிரலையும் பவித்திர விரலையும் சேர்த்துக் கொண்டு மூக்குப்புடைகள், கண்கள், காதுகள், தொப்பிள், நெஞ்சு, தோள்கள், சிரசு இந்த இடங்களை வலம் இடமாக தொடவும்

கரசுத்தி

அஸ்த்திராயபட்

என்று வலக்கையால் இடக்கையிலும் இடைக்கையால் வலக்கையிலும் உள்ளும் புரமுந்துடைத்து இரண்டு கையையும் சேர்த்து இரண்டு சிறு விரலில் கட்டைவிரல் இரண்டாலும்

சிவாசனுய நமகா சிவமூர்த்தியே நமகா

என்று உள்ளங் கையிலும்

ஈசான மூர்த்தியே நமகா

என்று ஆள்காட்டி விரல்களால் இரண்டு கட்டை விரல்களையும்

தத்புருஷ வக்திராய நமகா

என்று இரு கட்டைவிரல்களாலும் இரண்டு ஆள்காட்டி விரல்களையும்

அகோர இருதயாய நமகா

என்று இரண்டு நடுவிரல்களையும்

வாமதேவகுகியாய நமகா

என்றுஇரண்டு மோதிரவிரல்களையும்

சத்தியோ சாதமூர்த்தயே நமகா
என்று சுண்டுவிரல்களையும் தொட்டு
கவசாய நமகா
என்று கையைச் சுத்தி கரசுத்தி செய்து கொண்டு

அங்கசுத்தி

சிவாசநாய நமகா சிவமூர்த்தயே நமகா
என்று வலக்கைவிரல்களை மூடிக்கொண்டு பெருவிரலை நீட்டி நெஞ்சிலும்
ஈசான மூர்த்தயே நமகா
என்று மேலேசொல்லியபடி கையைவைத்துக் கொண்டு தலையிலும்
தத்புருஷவக்த்ராய நமகா
என்று ஆள்காட்டி விரலால் நெற்றியிலும்
அகோர இருதயாய நமகா
என்று—நடுவிரலால் நெஞ்சிலும்
வாமதேவ குகியாய நமகா
என்று பவித்திர விரலால் தொப்பிளிலும்
சத்யோசாத மூர்த்தயே நமகா
என்று சுண்டுவிரலால் முழந்தாள்களிலும்
இருதயாய நமகா—என்று பெருவிரலால் நெஞ்சிலும்
சிரசே நமகா—என்று கட்டை விரலால் தலையிலும்
சிகாய நமகா
என்று ஆள்காட்டி விரலால் தலை ரோமத்தையும்
அஸ்த்ராய நமகா
என்று கையைத்தட்டி தலைக்கு மேலே நாலுபக்கத்திலும் சுடக்கி

கவசாய நமகா

என்று கைகளின் விரல்களை மூடிக் கொண்டு ஆள் காட்டி விரல்களை நீட்டி தோள்களுக்கு நேராகக் காட்டி அங்கசுத்தி செய்துகொண்டு

பிராணயாமம் - (அதாவது மூக்கைப்பிடித்தல்)

வலக்கை பெருவிரலை வலது மூக்குப்புடையிலும், ஆள்காட்டி விரலை மூக்குமேலேயும், நடுவிரலை மடக்கி, பவித்திரவிரலை இடது மூக்குப்புடையிலும் வைத்துப் பிடித்துக் கொண்டு

ஈசான மூர்த்தயே நமகா. தத்புருஷவக்த்ராய நமகா. அகோர இருதயாய நமகா. வாமதேவ குகியாய நமகா. சத்யோசாத மூர்த்தயே நமகா

இந்த மந்திரங்களைச் சொல்லி அந்தக் கையை

சிவாய நமகா

என்று வலக்காதில் வைக்க பிராணயாமம் முடித்துக் கொண்டு விபூதியை எடுத்து இடது கையில் வைத்து

அஸ்த்திருயபட்

என்று வலக்கையால் தண்ணீரைத் தெரித்து கையை மூடி வலக்கையை மேலே வைத்து

ஈசான மூர்த்தியே நமகா தத்புருஷ வக்த்ராய நமகா
அகோர இருதயாய நமகா வாமதேவகுகியாய நமகா
சந்தியோகசாதமூர்த்தியே நமகா

என்று அபி மந்திரத்து

அஸ்திருயபட்

என்று பவித்திர விரலாலும் பெருவிரலாலும் கொஞ்ச விபூதியை யெடுத்து தென்மேற்கு மூலையில் தெரித்து

கவசாய நமகா

என்று தண்ணீர் விட்டுக் குளைத்து

ஈசான மூர்த்தியே நமகா

என்று இரண்டுகையாலும் தலையிலும்

தத்புருஷவக்த்ராய நமகா

என்று நெற்றியிலும்

அகோரஇருதாய நமகா என்று நெஞ்சிலும்

வாமதேவகுகியாய நமகா

என்று தொப்பிளிலும்

சத்யோசாதமூர்த்தியே நமகா

என்று முழந்தாள்களிலும், தோள்களிலும், முழங்கை களிலும், மணிக்கட்டுகளிலும்' விலாக்களிலும், முதுகி லும், வலம் இடமாகப்பூசி கையைக்கழுவி அந்த தண்ணீரை இடதுகையில் வைத்துக்கொண்டு

ஈசானமூர்த்தியே சுவதா தத்புருஷ வக்திராய சுவதா

அகோர இருதயாய சுவதா வாமதேவகுகியாயசுவதா

சத்யோசாதமூர்த்தியே சுவதா—

என்று வலக்கை விரல்களால் சிரசில் தனித்தனியே தெரித்து மிஞ்சிய தண்ணீரை வலக்கையில்விட்டு மூக்கைப் பிடித்துக்கொண்டு அதில்சொல்லிய மந்திரங்களைச்சொல்லி மிஞ்சிய தண்ணீரை வலதுகால் பெருவிரலுக்கு நேராகவிட்டு

அஸ்த்ருய்பட்—

என்று அந்தஇடத்தில் வலக்கையால் தண்ணீரை தொட்டு தெரித்து பின்பு முன் சொன்னபடி

ஆசமநம்—செய்து தொடுமிடம்—தொட்டு
கரசுத்தி—செய்து அங்கசுத்தி—செய்து
பிராணயாமம்—செய்துமுடித்துக்கொண்டு

கவசாய நமகா—

என்று கையால் தண்ணீரை அள்ளி தன்னை வலமாகச் சுத்திவிட்டு

தற்பணம்

ஈசான மூர்த்தயே சுவாகா தத்புருஷவக்த்ராய சுவாகா
அகோர இருதயாய சுவாகா வாமதேவகுகியாய சுவாகா
சத்யோசாத மூர்த்தயே சுவாகா

என்று தன்கையில் தண்ணீரை அள்ளி தனித்தனியே விட்டு இரண்டுகையிலும் தண்ணீரை வைத்துக்கொண்டு நான்செய்த பாபமெல்லாம் ஆகாசவாணி பூமாதேவி சாக்ஷியாக சிவசூரியபகவானுக்கு தெத்தம்—என்றுவிட்டு தற்பணம்செய்து முடித்துக்கொண்டு மேற்கே மகாகணபதயே நமகா என்றும் வடக்கே கைலாசபதியே நமகா என்றும் கிழக்கே சிவசூரியாய நமகா என்றும் தெற்கே பிதுர்தேவதாயநமகா என்று கும்பிட்டு 3தரம் சுற்றி பின்பு மூலமந்திரத்தை 108 உருசெபம் செய்ய வேண்டும்.

அனுஷ்டானவிதி முற்றிற்று.

குரு வணக்கம்

சிரம்பரவு சைவநெறி தேர் பொருளாம்
சித்தாந்தம் திகழ்ந்து மன்ன.
பரங்கிரிமுன் சேதுதல மான்மியமும்
பகர்சித்தி உரையுந் தந்து.
வரம்பெரு நல்தனவணிக மரபினுக்கும்
குருவாகி வயங்கும் எங்கள்
நிரம்பவழகியதே வின்நிறை மலர்த்தாள்
இணையென்றும் நினைந்து வாழ்வாம்.

வாழ்த்து விருத்தம்

உலகெலாம் வாழி வாழி யொன்பது நகரக்கோயில்
வலமுள பரமனம்மை மரகதவிநாயகன் சீர்
நலமிகு முருகன்வாழி நாளுஞ்சந்தானம் பல்கி
மலர்மகளருள் பெற்றேழுவாழி நகரத்தார்வாழி